செய்திருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். முழு விவரம் கேட்ட அளவிலே தெரியவருவது என்னவென்றால், செஸ் என்ற பெயராலே வசூலிக்கப்பட்ட தொகை, பனப்பாக்கம், பரஞ்சி, நெமிலி ஆகிய மூன்று ஊர்களிலும் 1967–68-ம் ஆண்டிற்கு 15,576·53 பைசா என்று இருக்கிறது. இதிலே மற்ற அயிட்டங்களும் இருக்கின்றன. புரோக்கர் பீஸ், லைசென்ஸ் பீஸ் என்று 6,602·30 ரூபாய் இருக்கிறது. தக்கோலத்திலிருந்து 2,268·80 வந்திருப்பதாகத் தெரிகிறது. கடந்த எப்ரல், மே, ஜூன் மாதங்களிலே தக்கோலத்திலிருந்து வசூலான தொகை 1,112·90 என்று இருக்கிறது. திரு. எஸ். ஜே. ராமசாமி அவர்கள் கேட்டதில் குறிப்பிட்டு இருப்பது தக்கோலமே 25 ஆயிரம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். கனம் உறுப்பினர் அவர்கள் சொல்லுகிற புள்ளிவிவரத்திற்கும் இதற்கும் நிறைய மாறுபாடு இருக்கிறது. இது மொத்த வியாபாரிகளிடமிருந்தும் சில்லரை வியாபாரிகளிடமிருந்தும் டெகாடிகேடட் ஓனர்களிடமிருந்தும்தான் வசூல்செய்யப்படுகிறது. வட ஆர்க்காட்டிலிருந்து மணிலாவை சென்னைக்கும் மற்ற இடங்களுக்கும் எடுத்துவருகிறார்கள். மிடில் மென் இதற்காக ஏற்பாடு செய்து கடனைக் கொடுத்து செஸ் கொடுக்காமல் தவறான முறையிலே எடுத்துச்சென்றால் வழியிலே மறித்து உண்மையான வியாபாரமா என்று பரிசீலனை செய்கிறார்கள். திரு. எஸ். ஜே. ராமசாமி போன்ற வியாபாரிகள் செய்தால் நிச்சயமாக செஸ் வரி வசூல் செய்யமாட்டார்கள். ஆனால் தரகர்கள் எடுத்துச்செல்கின்றபொழுது யாராய் இருந்தாலும் அதற்கு செஸ் வரி வசூல் செய்யபபடுகிறது.

Supply of fertilisers in Damaneri and Rangapuram Panchayats.

272. *Q.*—Thiru K. Vinayakam : **Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—**

(*a*) whether the Government are aware of the fact that fertilisers like Ammonium Sulphate and Urea are not made available to the farmers of Damaneri and Rangapuram Panchayats in Ramakrishnarajupet Panchayat Union, Tiruttani taluk, Chingleput district ; and

(*b*) if so, the steps taken to rectify this defect ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) இல்லை, மொத்தம் கிடைத்த உர அளவையொட்டி முடிந்த அளவிற்குக் கடந்த ஆண்டில்
மு.ப 10–00 1967–68) உரம் வழங்கப்பட்டது. ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலிருந்து அனுமதிச் சீட்டுப்பெறாமல் உழவர்களுக்கு அமோனியம் சல்பேட்டும் யூரியா உப்பும் கூட்டுறவுச் சங்கங்கள் விற்கலாமென 1968, மே திங்களில் செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் கட்டளை பிறப்பித்தார். ஊராட்சி ஒன்றிய அதிகாரிகளிடம் எவரும் உரம் கிடைக்காமல் இடர்ப்பாடு அடைந்ததாக கூறவில்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. கே. விநாயகம் : நான் கேள்வி கேட்ட நேரத்தில் யூரியா, அம்மோனியம் சல்பேட் போன்ற உரங்கள் அந்த இரண்டு ஊர்களுக்கும் கிடைக்காத நிலை இருந்தது. அந்த இரண்டு ஊர்களுக்கும் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் இருந்து போக வேண்டுமென்றால் மலைகளைச் சுற்றி குறைந்தது 15 மைலுக்கு மேல் போகவேண்டியிருக்கிறது. அப்போது மக்கள் உரம் வந்து சேரவில்லை என்று கேட்ட காரணத்தால்தான் கேள்வி போட்டேன். இப்போதாவது அந்தப் பகுதி விவசாயிகளுக்குத் தேவையான அளவுக்கு உரம் கொடுக்கப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இப்போது உரம் நிறையத் தேங்கியிருக்கிறது. உரம் இல்லாத பகுதியே கிடையாது. உரத்தை எப்படியாவது விற்க வேண்டுமென்ற நிலைதான் இருக்கிறது. கனம் விநாயகம் அவர்கள் பிரச்சாரம் செய்து உரத்தை விற்பதற்கு வழி செய்ய

வேண்டும். அந்தப் பகுதியில் உரத்தை உபயோகிக்காததற்குக் காரணம் காலாகாலத்தில் மழை இல்லாமையினால்தானே தவிர, கனம் அங்கத்தினர் சொல்லுவது போல் உரத் தட்டுப்பாடினால் அல்ல.

Liberalisation of abortions.

*273 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state whether the State Government has been consulted by the Union Government on the question of liberalisation of abortions ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஆம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : கருச் சிதைவைச் சட்ட பூர்வமாக்க வேண்டுமென்ற கருத்தை இந்த அரசு ஆதரிக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இது கருச் சிதைவை சட்ட பூர்வமாக ஆக்கப்படுமா என்ற கேள்வி அல்ல. கருச் சிதைவைச் செய்வதற்கு மருத்துவ மனையில் ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளனவா என்பது கேள்வி. இதைப் பற்றி ஏற்கெனவே குடும்பக் கட்டுப்பாட்டை அனுசரித்து சென்னையில் ஃபாமிலி ப்ளானிங் கவுன்சில் ஆலோசனைப்படி சாந்திலால் கமிட்டி மூலம் பரிசிலனை செய்து அந்தக் கமிட்டியினர் சில காரணங்களை முன்னிட்டு பெண்களின் உடலுக் கும், உயிருக்கும் எந்தவித ஊறும் ஏற்படாத வகையில், சித்தாகூல முடைய பெண்கள் கருவுற்றிருந்தாலும், 16 வயதுக்குட்பட்ட பெண்கள் கருவுற்றிருந்தாலும் எந்த விதமான கோளாறும் ஏற்படாத வகையில் அந்தக் கருவைச் சிதைப்பதற்கு மருத்துவ சிகிச்சை அளிக்கலாம் என்ற முடிவை எடுத்திருந்தார்கள். ஆனால் டைரக்டர் ஆப் ஹெல்த் சர்விசஸ் அண்டு பாமிலி பிளானிங் நமது மாநிலத்தில் இருக்கிற நிபுணர்களான டாக்டர் எ. எல். முதலியார், எம். கே. கே. மேனன் ஆகியோரைக் கலந்து ஆலோசித்ததில் அவர்கள் சம்மதிக்கவில்லை. ஆனாலும் இதை அவசியம் என்று உணர்ந்து இதை ஏற்றுக் கொள்ளும் முறையினால் மேற்கூறிய வகையில் எந்த விதக் குந்தகமும் ஏற்படாத வகையில் சில நல்ல காரணங்களை முன்னிட்டு குடும்பக் கட்டுப்பாட்டை அனுசரித்து சட்டப்படி தவறு இல்லாத அளவுக்கு முன் வருவார்களானால் அவர் களுக்குக் கருச் சிதைவைச் செய்யலாம் என்று பல நிபந்தனைகளோடு ஒத்துக் கொண்டிருக்கிறார்கள்.

Public Buildings (Licensing) Act.

*274. *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state the details of the establishment set up to enforce the Madras Public Buildings (Licensing) Act ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஏற்கெனவேயுள்ள அரசாங்கப் பணியாளர்கள் இச்சட்டத்தைச் செயல்படுத்துவதற்குத் தற் போதைக்குப் பயன்படுத்தப்படுகின்றனர். சென்னை, நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர்களது தனி உதவியாளர்களும், வருவாய்க்கோட்ட அதிகாரிகள் அனைவரும், (தனிப் பொறுப்பு வகிக்கும் எல்லாத் துணைத் தாசில்தார் களும் உட்பட) எல்லாத் தாசில்தார்களும் இச்சட்டத்தின் கீழ் உரிமம் வழங்குவதற்குத் தகுதியுள்ள அதிகாரிகளென இச்சட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : இந்த பப்ளிக பில்டிங்ஸ் லைசென்ஸிங் என்ற சட்டத்தின் கீழ் கிட்டத்தட்ட 2, 3 லட்சம் சிறு வியாபாரிகள், கடை வைத்திருப்பவர்கள் இதன் கீழ் வரக்கூடிய நிலைமை இருக்கிற காரணத்தாலும் பல வியாபாரிகள் இந்த அரசாங்கத்திடம் முறையிட்டு